## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## இரண்டாம் பத்து

### ஆறாம் திருமொழி - நண்ணாத
### திருக்கடல்மல்லை 2

** நண்ணாத வாள் அவுணர் * இடைப் புக்கு * வானவரைப்
பெண்ணாகி * அமுதூட்டும் பெருமானார் ** மருவினிய
தண்ணார்ந்த கடல்மல்லைத் * தலசயனத்து உறைவாரை *
எண்ணாதே இருப்பாரை * இறைப் பொழுதும் எண்ணோமே 1

பார்வண்ண மடமங்கை * பனி நன்மாமலர்க் கிழத்தி *
நீர்வண்ணன் மார்வகத்தில் * இருக்கையை முன் நினைந்து அவன் ஊர் **
கார்வண்ண முது முந்நீர்க் * கடல்மல்லைத் தலசயனம் *
ஆர் எண்ணும் நெஞ்சு உடையார் * அவர் எம்மை ஆள்வாரே 2

** ஏனத்தின் உருவாகி * நிலமங்கை எழில் கொண்டான் *
வானத்திலவர் முறையால் * மகிழ்ந்து ஏத்தி வலங்கொள்ள **
கானத்தின் கடல்மல்லைத் * தலசயனத்து உறைகின்ற *
ஞானத்தின் ஒளி உருவை * நினைவார் என் நாயகரே 3

விண்டாரை வென்றாவி * விலங்கு உண்ண மெல்லியலார் *
கொண்டாடும் மல்லகலம் * அழல் ஏற வெஞ்சமத்துக்
கண்டாரை ** கடல்மல்லைத் * தலசயனத்து உறைவாரை *
கொண்டாடும் நெஞ்சு உடையார் * அவர் எங்கள் குல தெய்வமே 4

பிச்சச் சிறு பீலிச் * சமண் குண்டர் முதலாயோர் *
விச்சைக்கு இறை என்னும் * அவ்விறையைப் பணியாதே **
கச்சிக் கிடந்தவன் ஊர் * கடல்மல்லைத் தலசயனம் *
நச்சித் தொழுவாரை * நச்சு என்தன் நல்நெஞ்சே! 5

புலங்கொள் நிதிக் குவையோடு * புழைக் கைம்மா களிற்றினமும் *
நலங்கொள் நவமணிக் குவையும் * சுமந்து எங்கும் நான்றொசிந்து **
கலங்கள் இயங்கும் மல்லைக் * கடல்மல்லைத் தலசயனம் *
வலங்கொள் மனத்தாரவரை * வலங்கொள் என் மட நெஞ்சே! 6

பஞ்சிச் சிறு கூழை * உருவாகி மருவாத *
வஞ்சப் பெண் நஞ்சு உண்ட * அண்ணல் முன் நண்ணாத **
கஞ்சைக் கடந்தவன் ஊர் * கடல்மல்லைத் தலசயனம் *
நெஞ்சில் தொழுவாரைத் * தொழுவாய் என் தூய் நெஞ்சே! 7

செழு நீர் மலர்க் கமலம் * திரை உந்து வன்பகட்டால் *
உழு நீர் வயல் உழவர் உழப் * பின் முன் பிழைத்து எழுந்த **
கழு நீர் கடி கமழும் * கடல்மல்லைத் தலசயனம் *
தொழு நீர் மனத்தவரைத் * தொழுவாய் என் தூய் நெஞ்சே! 8

பிணங்கள் இடு காடு அதனுள் * நடம் ஆடு பிஞ்ஞகனோடு *
இணங்கு திருச்சக்கரத்து * எம்பெருமானார்க்கு இடம் ** விசும்பில்
கணங்கள் இயங்கும் மல்லைக் * கடல்மல்லைத் தலசயனம் *
வணங்கும் மனத்தார் அவரை * வணங்கு என்தன் மட நெஞ்சே! 9

** கடி கமழும் நெடுமறுகில் * கடல்மல்லைத் தலசயனத்து *
அடிகள் அடியே நினையும் * அடியவர்கள் தம் அடியான் **
வடிகொள் நெடுவேல் வலவன் * கலிகன்றி ஒலி வல்லார் *
முடிகொள் நெடுமன்னவர் தம் * முதல்வர் முதல் ஆவாரே 10

**அடிவரவு:** நண்ணாத பார் ஏனத்தின் விண்டாரை பிச்சம் புலம் பஞ்சி செழுநீர் பிணங்கள் கடி திவளும்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---